# ***DEPOSITION OF WITNESS***
# IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

| | | |
|---|---|---|
| **MCOP No. 14/2024** | **நாள் – 21.01.2026** | **சாட்சி – ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.அம்பேத்கார் | தந்தை பெயர் | திரு.சுந்தர்ராஜன் |

**<u>2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

விபத்து நடந்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், தகவல் தெரிந்து சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு செல்லும் போது எத்தனை மணி என்றால் 09.02.2022 அன்று இரவு 11.00 மணியளவில் சென்றேன். விபத்து நடந்த இடத்தை நான் பார்வையிடும் போது விபத்து சம்பந்தமாக ஒரு ஆய்வறிக்கை தயார் செய்ய வேண்டும் என்றாலும், அவ்வாறு நான் தயார் செய்தேனா என்றால் நான் ஆய்வறிக்கை தயார் செய்தேன். மேற்கண்ட ஆய்வறிக்கையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை நிர்வாகத்திடம் தாக்கல் செய்துள்ளேன். எனது ஆய்வறிக்கையை பார்த்தால் எங்களது போக்குவரத்து கழகத்தின் பேருந்தின் எந்தெந்த பாகங்கள் சேதம் அடைந்தது என்று தெரியவரும் என்றால் சரிதான். சேதத்தை காட்டுவதற்கு நான் புகைப்படம் எடுக்கவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் பேருந்தின் முன் வலது பக்கத்தில் மோதியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி சொல்வதற்கு வரும் முன் முதல் தகவல் அறிக்கையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். முன் விசாரணையில் நான் சொல்லியுள்ள பேருந்திற்கான சேதங்கள் எவையும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வறிக்கைக்கு பேருந்து

அனுப்பப்பட்டது குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும், நானும் சென்றிருந்தேன். விபத்து நடந்த எத்தனை நாட்கள் கழித்து அரசு பேருந்தானது மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது என்றால் விபத்து நடந்த மறுநாள் 10.02.2022 அன்று அனுப்பப்பட்டது. அதுவரை பேருந்தானது எங்கிருந்தது என்றால் டெப்போவில் இருந்தது. ம.சா.ஆ.2 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் 13.09.2022 ம் தேதியன்று பேருந்தானது மோட்டார் வாகன ஆய்வாளரால் பார்க்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் எந்த டிப்போவில் வேலை பார்த்தேன் என்றால் திருத்துறைப்பூண்டி டிப்போவில் வேலை பார்த்தேன். வாகனம் எந்த டிப்போவில் சீர் செய்யப்பட்டது என்றால் திருத்துறைப்பூண்டி டிப்போவில் சீர் செய்யப்பட்டது. விபத்து சம்பந்தப்பட்ட வாகனம் சீர் செய்யப்பட்டது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ம.சா.ஆ.4 ல் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். பேருந்தை சரி செய்வதற்கு எங்கிருந்து பொருட்களை எடுத்து சரி செய்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நாங்கள் ஸ்டோரின் இருப்புகளை பராமரிப்பதால் அது குறித்து எனக்கு நேரடியாக தெரியும். பேருந்திற்கு சரி செய்ய தேவைப்படும் உதிரி பாகங்கள் போக்குவரத்துக்கழகத்தின் ஸ்டோரில் இருந்து எடுக்கப்படும் என்றால் சரிதான். போக்குவரத்துக்கழகத்தின் ஸ்டோரில் இருந்து பொருட்களை எடுக்கும் போது அங்கு பொறுப்பிற்கு உரியவர் என்ன பொருட்கள் எடுக்கப்படுகிறது என்பது குறித்து பதிவு செய்துக்கொள்வார் என்றால் சரிதான். அந்த பதிவேட்டை பார்த்தால் பேருந்தை சரிசெய்ய என்னென்ன பொருட்கள் எடுக்கப்பட்டது என்பது குறித்து தெரியவரும் என்றால் சரிதான். பேருந்தை சரி செய்ய எத்தனை நாட்கள் ஆகியது என்றால் ஒரு வாரத்திற்கு மேல் ஆகியது. பேருந்தை சரி

செய்ய எந்த தேதியில் பேருந்து கொடுக்கப்பட்டது, எந்த தேதியில் சீர் செய்து பேருந்து திரும்பவும் கொடுக்கப்பட்டது என்பதற்கான பதிவுகள் அடங்கிய பதிவேடு உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் மனுதாரர் எங்களது போக்குவரத்துக்கழக மேலான் இயக்குனர் என்றால் சரிதான். அவரை சாட்சியாக விசாரணை செய்ய உள்ளோமா என்றால் இல்லை. இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்க மேலான் இயக்குனர் அதிகாரம் அளித்துள்ளாரா என்றால் அதிகாரம் அளித்துள்ளார். அந்த அதிகார கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முதல் விசாரணையில் மேலான் இயக்குனர் எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அதிகாரம் கொடுத்துள்ளார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பேருந்தின் பம்பரில் சேதப்படுத்தப்பட்ட பகுதியை தட்டி சரி செய்யப்பட்டதா அல்லது புதிய பம்பர் மாற்றப்பட்டதா என்றால் புதிய பம்பர் மாற்றப்பட்டது. சேதப்பட்ட பொருட்கள் எதுவும் சரி செய்யப்படாமல் அனைத்தும் புதியதாக மாற்றப்பட்டதா என்றால் அனைத்தும் புதியதாக மாற்றப்பட்டது. இந்த பேருந்தின் சேதம் அடைந்த பொருட்களை ஏலம் விட்டு விற்பது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு இந்த பேருந்தின் சேதம் அடைந்த பொருட்களின் உத்தேச மதிப்பு எவ்வளவு என்றால் அவ்வாறு அறுதியிட்டு கூறயியலாது, மொத்தமாக சேதம் அடைந்த மற்ற பேருந்தின் பாகங்களையும் சேர்த்து ஏலம் விடமுடியும். இந்த பேருந்தின் சேதம் அடைந்த பொருட்கள் ஏலம் விடப்பட்டது என்றால் சரிதான். உத்தேசமாக இந்த பேருந்தின் சேதம் அடைந்த பொருட்களின் மதிப்பு எவ்வளவு என்றால் மொத்தமாக மற்ற பொருட்களுடன் சேர்ந்து ஏலம் விட்டதால் தனியாக தனி மதிப்பீடு செய்ய இயலவில்லை. பணிமனையில் வேலை செய்யும் மெக்கானிக் பணியாளர்களுக்கு நிரந்தர சம்பளம் என்றால் சரிதான். வேலை இருந்தாலும்,

இல்லாவிட்டாலும் அவர்களுக்கு மாத சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்றால் சரிதான். ரெகுலர் தொழிலாளர்களை வைத்து இந்த பேருந்தை சரி செய்ததால் தொழிலாளர் கூலி என கோர இயலாது என்றால் சரியல்ல. உதிரி பாகங்கள் எந்த போக்குவரத்துக்கழக பணிமனையில் இருந்து வாங்கப்பட்டது என்றால் கும்பகோணம் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனையில் இருந்து வாங்கப்பட்டது. கும்பகோணம் பணிமனையில் இருந்து பொருட்களை எங்களுக்கு அனுப்பும் போது ஒவ்வொரு பொருட்களின் விலை எவ்வளவு என்று குறிப்பிட்டு எங்களுக்கு அனுப்புவது வழக்கம் என்றால் சரிதான். இந்த பேருந்து எந்த வருடத்திய தயாரிப்பு என்றால் தெரியவில்லை, கோப்புகளை பார்த்து தான் சொல்ல முடியும். பழைய பேருந்துகளுக்கு வருட தேய்மான மதிப்பு 20% என்றால் சரிதான். எத்தனை வருடங்கள் கழித்து பேருந்தை லாயக்கு அற்றது என்று முடிவு செய்து ஒதுக்குவது எப்போது என்றால் 12 வருடங்கள் கழித்து அவ்வாறு லாயக்கு அற்றது என்று முடிவு செய்வோம். இந்த பேருந்தானது 12 வருடங்களை கடந்தது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 ல் விலை பட்டியல் அதிகமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4ல் தொழிலாளர் கூலி என்ற தலைப்பின் கீழ் கோர இயலாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4ல் ரசீதுகளில் தொகைகளை அதிகப்படுத்தி குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றாலும், அதனை 2ஆம் எதிர்மனுதாரர் வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றாலும் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.01.21 11:04:01 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*